இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 18.08.2026

# மூன்று மாதங்களில் முதலமைச்சருக்கு வந்த பயம்!

சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றிய முதலமைச்சர் விஜய்யின் மானம் காற்றில் பறந்தது. வெட்கமோ, கூச்சமோ இல்லாமல் ஒரு நடிகையை முன்வரிசையில் உட்கார வைத்து, இருவரும் மாறி மாறி சல்யூட் வைத்துள்ள காட்சியை அவருக்கு வாக்களித்தவர்களாலேயே சகிக்க முடியவில்லை. அசிங்கத்தையும் அருவருப்பையும் பட்டவர்த்தனமாகச் செய்வதன்மூலமாக அதனை நியாயப்படுத்த நினைக்கிறவர் தான் இன்று தமிழ்நாட்டுக்கு முதலமைச்சராக வந்துள்ளார்.

மூன்றே மாதங்களில் அவருக்கு தனது செல்வாக்கு நிலைக்குமா, பதவி நிலைக்குமா என்ற பயம் வந்துவிட்டது. அதையும் அவர் உரையே காட்டிக் கொடுத்துவிட்டது.

**கொடி ஏற்றிவிட்டு முதலமைச்சர் விஜய் பேசுகிறார்... “எல்லோரும் வாக்களித்துவிட்டோம், விஜய்யை ஜெயிக்க வைத்து முதலமைச்சர் ஆக்கிவிட்டோம், எனவே கடமையெல்லாம் முடிந்து விட்டது என்று யாரும் ஒதுங்கிப் போய்விடாதீர்கள். இனிமேல்தான் நீங்கள் நம்முடனே, அரசுடனே இருக்க வேண்டும். அப்போதுதான் உங்களுக்காக இருக்கிற அனைத்து நல்ல திட்டங்களையும் என்னால் செயல்படுத்த முடியும்” என்று அழுது புலம்பி இருக்கிறார்.**

இந்தப் புலம்பலுக்கு, இந்த அழுகைக்கு என்ன காரணம்? அவரை நம்பி வாக்களித்தவர்கள், ‘தவறு செய்துவிட்டோம்’ என்று வருந்திக் கொண்டு இருக்கிறார்கள். 10 வயது சிறுமி கோவையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டபோது அதை மறைக்க நினைத்தது விஜய் அரசு. ‘நீங்க ஆக்ஷன் ஹீரோ... தப்பு நடந்தா நடவடிக்கை எடுப்பீங்கன்னு நினைச்சு தானே வாக்களித்தோம்’ என்று ஒரு பெண் கதறினாரே. இப்படி பல பேரும் கதறிக் கொண்டு இருக்கிறார்கள்.

தனது படத்தைத் தயாரித்த சினிமா தயாரிப்பாளர்களுக்கு மகுடம் சூட்டிக் கொண்டு இருக்கிறார் விஜய்.

**‘ஜனநாயகன்’ படத்தைத் தயாரித்த வெங்கட நாராயணா தமிழ் நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாம். ‘பிகில்’, ‘கோட்’ படத்தை தயாரித்த அர்ச்சனா கல்பாத்தி கோவில்களுக்கான அறங்காவலர்களைத் தேர்வு செய்யப் போகிறாராம். ‘லியோ’ படத்தைத் தயாரித்த ஜெகதீஷ் பழனிசாமி தான் முதலமைச்சரின் தனிச் செயலாளர். தனது ஜோசியருக்கு மகுடம். தேர்தலுக்கு முன்னதாக தனக்கு செலவு செய்தவருக்கு பதவி. இதுதான் நடக்கிறது. இதை எல்லாம் தலையாட்டி ஏற்றுக் கொள்வார்கள் மக்கள் என்று நினைக்கிறாரா விஜய்?**

**பாலியல் வன்கொடுமைகள் நடக்காத நாள் இல்லை. இதை விஜய் அரசு மறைக்கும் என்பதற்கு உதாரணம் தான் கோவைச் சம்பவம். போதை மருந்து நடமாட்டம் துளியும் கட்டுப்படுத்தப்படவில்லை. போதைப் பொருள் நடமாட்டம் குறித்து தகவல் கொடுத்த காரணத்தால் கோவை மாணவன் அமுதன் அந்தக் கும்பலால் அடித்தே கொல்லப்பட்டுள்ளார். அதையே மறைக்கும் வகையில், ‘இது கோஷ்டி தகராறால் ஏற்பட்ட மரணம்’ என்று சட்டமன்றத்தில் சொன்னார் அமைச்சர் ராஜ்மோகன். காவல் துறையைக் கையில் வைத்துள்ள முதலமைச்சர் விஜய், வாய் திறக்கவில்லை.**

அமைச்சர்கள் மீது, எம்.எல்.ஏ.க்கள் மீது வந்த புகார் மீதாவது நடவடிக்கை எடுத்துள்ளாரா விஜய்? திருவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது விஜய் ரசிகை ஒருவரே பாலியல் புகார் சொன்னார். அந்த ரசிகையை கட்சியைவிட்டு நீக்கிவிட்டு சரவணனுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்துள்ளார் விஜய். ‘அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் லஞ்சம்’ என குற்றம் சாட்டிய த.வெ.க. வழக்கறிஞர் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளார். பவுடர் பயன்படுத்தி அதை வீடியோ எடுத்துப் போட்ட அமைச்சர் சரத்குமார் இன்னமும் அமைச்சரவையில் இருக்கிறார். 100 கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் சொத்தை அபகரித்த செயலுக்குப் பொறுப்பேற்க வேண்டிய அமைச்சர் ரமேஷ் இன்னமும் அமைச்சராகத் தான் நீடிக்கிறார். எவர்மீதும் இதுவரை விஜய் நடவடிக்கை எடுத்தது இல்லை.

அரசைப் பற்றி விமர்சித்து ‘ட்விட்டர்’ போட்டால் கைது. நீதிமன்றங்கள் நித்தமும் த.வெ.க. ஆட்சியாளர்கள்மீது தலையில் கொட்டுகின்றன. சொரணையே இல்லை இவர்களுக்கு. இப்படித்தான் போய்க் கொண்டு இருக்கிறது ஆட்சி. இதை எல்லாம் மக்கள் சகித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறார் விஜய்.

**சுதந்திர தின விழாவுக்கு ஒரு நடிகையை அழைத்துவந்து, அவருக்கு ‘சல்யூட்’ அடிப்பதை விஜய் ரசிகர்களாலேயே ஏற்றுக் கொள்ள முடியவில்லையே... மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?**

**சுதந்திர தினத்தன்று விடுதலைப் போராட்ட வரலாறுகளை ஊடகங்கள் வெளியிடும். ஆனால் இம்முறை நடிகை ஒருவருடன் முதலமைச்சர் இதுவரை ஐந்து முறை ஒன்றாக வெளியில் வந்துள்ளார் என்று வரலாறு போடும் கேவலத்தைப் பார்க்கிறோம்.**

‘விஜய் நன்றாக டான்ஸ் ஆடுவார்’ என்பதற்காக ஏறிய மின்சாரக் கட்டணத்தை ஏற்றுக் கொள்வார்களா மக்கள்? ‘விஜய் அழகாகச் சிரிக்கிறார்’ என்பதற்காக ‘சொத்து வரியை எவ்வளவு வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள்’ என்று சொல்லி விடுவார்களா தமிழ்நாட்டு மக்கள்?

**சமூக வலைதளங்களில் கழுவிக் கழுவி ஊற்றுகிறார்கள். ‘உங்களுக்குத் தான் வாக்களித்தோம்... வாக்களித்ததற்காக வருத்தப்படுகிறோம்’ என்று சொல்லும் வீடியோக்கள்தான் அதிகமாகப் பரவுகின்றன. அதனால்தான், ‘என்னோடு இருங்கள், போய்விடாதீர்கள்’ என்று கழிவிரக்கம் தேடப்பார்க்கிறார் விஜய்.**

**மக்கள் ஏமாளிகள் அல்ல. அவர் இன்னமும் தனிமைப்படுத்தப்படுவார்.**

●●

## செஞ்சியில் தேசியக் கொடியை

### பேரூராட்சித் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஏற்றி வைத்தார்!

*செஞ்சி, ஆக. 18 -*

*நாட்டின் 80வது சுதந்திர தின நாள் திருவிழா நாடு முழுவதும் கோலாலமாக கொண்டாடப்பட்டது.*

*விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் நாட்டின் 80-வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு பேரூராட்சி அலுவலகத்தில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.*

*நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மன்ற உறுப்பினர்கள் சந்திரா அச்சுதன், அஞ்சலை நெடுஞ்செழியன், சீனிவாசன், ஜான்பாஷா, சங்கர், எம்.பி.ஆர்.மோகன், சிவகுமார், அகல்யா வேலு, சுமித்ரா சங்கர், சங்கீதா சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், மகாலட்சுமி கமலநாதன்,*

*தலைமை எழுத்தர் மைதிலி, தூய்மை அலுவலர் ராஜா, தூய்மை பணி மேற்பார்வையாளர் செந்தில் முருகன், முன்னாள் கவுன்சிலர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், பேரூராட்சி பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர்

# தொல்.திருமாவளவன் பிறந்தநாள்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஆக. 18 -**

**கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து நேற்று (17.08.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**“விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் சகோதரர் தொல்.திருமாவளவன் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**தாங்கள் நீண்ட காலம் நல்ல உடல்நலத்துடன் திகழ்ந்து, மக்கள் பணியில் தொடர்ந்து ஈடுபட விழைகிறேன்.”**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## ஆய்வு என்ற பெயரில் ‘ரீல்ஸ்’ விட்டு

# பட்டாசுத் தொழிலை முடக்குவதா?

### சிவகாசியில் – பல்லாயிரவர் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி!

**சிவகாசி, ஆக. 18 -**

**“ஆய்வு என்ற பெயரில் ‘ரீல்ஸ்’ விட்டு பட்டாசுத் தொழிலை முடக்கி லட்சக்கணக்கான தொழிலாளர்களை வஞ்சிப்பதா?” என்று சிவகாசியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான தங்கம் தென்னரசு பேசும்போது கூறினார்.**



விருதுநகர் மாவட்டம் சிவகாசியில், பட்டாசுத் தொழிலை முடக்கும் வகையில் ஆய்வு என்ற பெயரில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்து, விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டனப் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு பேசியதாவது:-

எழுச்சி மிகுந்த வகையில் போராட்டக் குரலை உரக்க எழுப்பி, செயலற்று கிடக்கக்கூடிய த.வெ.க. அரசினுடைய செவிப்பறைகளிலே நமது முழக்கம் மோதி முழங்கட்டும்.

இந்தப் போராட்டம் நம்முடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், பட்டாசுத் தொழிலின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றவும், இந்த மண்ணின் மரபையும், நம் மண்ணின் உயிர்த்தொழிலான பட்டாசுத் தொழிலின் ஜீவநாடியையும் பாதுகாக்கவும் நடைபெறுகிறது. இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடலேறுகளும், பல்வேறு வணிகச் சங்கங்களின் நிர்வாகிகளும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் திரண்டுள்ள இந்தப் போராட்டம், நமது ஒற்றுமையையும், போராட்ட உணர்வையும் வெளிப்படுத்தும் எழுச்சிமிகு நிகழ்வாக அமைந்துள்ளது.

#### பட்டாசுத் தொழிலை நசுக்கும் த.வெ.க. அரசு!

சிவகாசியில் நடைபெறும் இந்த எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தில் நமது உரிமைக்குரலை ஓங்கி முழங்கியிருக்கிறோம். ஒரு அரசு தனது மக்களைக் காப்பதில் எந்த அளவிற்கு முன்முயற்சியுடன் செயல்பட வேண்டுமோ, அதேபோல் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக இருக்கும் தொழிலையும் பாதுகாக்க முன்னுரிமை அளிக்க வேண்டும். ஆனால், த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று மாதங்களில் பட்டாசுத் தொழிலை நசுக்கும் வகையிலான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறது.

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலில் உலகளவில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள சிவகாசியில், ஏறத்தாழ நூற்றாண்டு காலமாக இந்தத் தொழில் செழித்து வளர்ந்து வந்துள்ளது. இந்தத் தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த பட்டாசுத் தொழில் நமது மாவட்டத்தின் ஜீவாதாரத் தொழில். எனவே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், கடந்த மூன்று மாதங்களில் தொழிலை நசுக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### முழுமையாக முடக்கம்!

பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்று நாம் கூறுவது ஏதோ சில நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அல்ல. இந்தத் தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காகத்தான். இந்த வட்டாரத்தில் 6,000க்கும் மேற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ள நிலையில், இதன்மூலம் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பைப் பெற்று வருகின்றனர். இத்தொழில் முழுமையாக முடங்கும் நிலையை கண்டித்துத்தான் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

இது குறித்த நமது உரிமைக்குரலைப் பிரதிபலிக்கும் வகையில் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரிலும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அனுமதியுடன், பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தி திமுக சார்பில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவர பரிந்துரை வழங்கியுள்ளோம்.

மேலும், இந்த அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் ஆற்றல்மிக்க எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டு வருகிறது. மக்களின் குரலை மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஓங்கி எழுப்பும் ஜனநாயக சக்தியாகவும், ஆளும் கட்சியின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் வலிமையான எதிர்க்கட்சியாகவும் கலைஞரால் போற்றி வளர்க்கப்பட்ட தி.மு.க. மட்டுமே செயல்படுகிறது.

#### கவலைப்படாத அரசு!

சமீபத்தில் நமஸ்கான்பட்டியில் ஏற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலை விபத்தில் மூன்று பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறேன். இது போன்ற துயரச் சம்பவங்கள் நடந்திருக்கக் கூடாது. ஆனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் விபத்துகளைக் காரணம் காட்டி ஒட்டுமொத்த பட்டாசுத் தொழிலையும் ஒரேடியாக முடக்கி நசுக்குவது எந்த வகையில் நியாயமாகும்.

ஏனெனில், ஒரு தொழிற்சாலை மூடப்பட்டால் அது அந்த நிர்வாகத்தோடு முடிந்துவிடாது. அந்தத் தொழிற்சாலையை நம்பியுள்ள தொழிலாளர்களின் குடும்பங்களின் நிலை என்னவாகும் என்பதை அதிகாரிகள் எண்ணிப் பார்க்க வேண்டும். முறையாக விதிகளைப் பின்பற்றாமல், அரசின் அனுமதியின்றி சட்டவிரோதமாக இயங்கும் தொழிற்சாலைகள் மீது அரசு நடவடிக்கை எடுப்பதை யாரும் தடுக்கப் போவதில்லை.

யாராவது சட்டவிரோதமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தால், அதை முழுமையாகத் தடுத்து நிறுத்தி, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால், முறையாக உரிமம் பெற்றுள்ள தொழிற்சாலைகளிலும் திடீர் ஆய்வுகள் என்ற பெயரில் சென்று தொழிலை மொத்தமாக முடக்குவது எந்த வகையில் நியாயம் என்பது தான் எங்களுடைய கேள்வி.

அதிலும் தீபாவளி நெருங்கி வரும் நிலையில், அடுத்த இரண்டு, மூன்று மாதங்கள்தான் பட்டாசு உற்பத்திக்கு மிகவும் முக்கியமான காலகட்டம். வெயில் காலத்தில்தான் பட்டாசு உற்பத்தியை மேற்கொள்ள முடியும். மழைக்காலம் தொடங்கிவிட்டால் உற்பத்தியை மேற்கொள்ள முடியாது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத சூழலும் ஏற்படும். அதேபோல் உற்பத்தி, பேக்கிங், போக்குவரத்து என அனைத்திற்கும் போதுமான கால அவகாசம் தேவைப்படுவதால் இப்போதே உற்பத்தியை முடிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால், இந்த அரசு இதுகுறித்து ஏதேனும் கவலைப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை.

#### லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்பு!

உற்பத்தியாளர்கள் ஒருபுறம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மறுபுறம் சில்லறை விற்பனையாளர்களும் கடைகளில் பொருட்களை வைத்து வியாபாரம் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சாதாரண சிறு வணிகர்களும், லட்சக்கணக்கான தொழிலாளர்களும் பாதிக்கப்படும் வகையில் ஆய்வுகள் என்ற பெயரில் அதிகாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கவை. இதை உடனடியாக நிறுத்த வேண்டும். த.வெ.க. ஆட்சி வந்த உடனே சிவகாசி மாறிவிடும் என்று கூறினீர்கள். இந்த மூன்று மாதங்களில் என்ன மாற்றம் வந்துள்ளது என கேள்வி எழுப்பினர்.

#### கழக ஆட்சியில் சிவகாசிக்கு பல்வேறு திட்டங்கள்!

மேலும், தி.மு.க. தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் சாட்சியபுரம் பாலம், திருத்தங்கல் பாலம், சிவகாசி ரிங் ரோடு, சிவகாசி - விருதுநகர் நான்கு வழிச்சாலை, மருத்துவமனை என பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு செய்து கொடுத்தது. ஆனால், மாற்றம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்த நீங்கள், இருக்கின்ற தொழிலையும் கெடுத்துகொண்டு இருக்கிறீர்கள்.

மேலும், பட்டாசுத் தொழிலாளர்களுக்கு இன்சூரன்ஸ் வழங்குவோம் என்று கூறினீர்களே, வழங்கினீர்களா? சிவகாசியில் இருக்கிற தொழில் துறை அமைச்சர், தேர்தல் நேரங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு வந்து ரீல்ஸ் எடுத்துப் பதிவிட்டார். அதில் 10 கி.மீ. சுற்றளவுக்கு ஒரு தீயணைப்பு நிலையமும், ஆம்புலன்ஸ் வசதியும் அமைக்கப்படும் என்று கூறினார். ஆனால், இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் அதுகுறித்து எங்காவது குறிப்பிடப்பட்டுள்ளதா?

மொத்தத்தில், எதை கேட்டாலும் எல்லாமே இல்லை, இல்லை என்று சொல்வதுதான் உங்களுடைய மாற்றம். ஆனால், இருக்கிறது, இருக்கிறது என்று மக்களுக்கு தேவையான அத்தனை திட்டங்களுக்கும் அள்ளித் தந்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

#### தொழில் முதலீடு எங்கே?

முன்னதாக, தொழில் முதலீட்டாளர் மாநாடு நடத்தி ரூ.1 லட்சம் கோடி முதலீடு கொண்டு வந்ததாக விளம்பரம் செய்கிறீர்கள். ஆனால், உங்கள் காலடியில் இருக்கக்கூடிய பட்டாசுத் தொழிலை ஏன் நசுங்க செய்கிறீர்கள்?. இதை காணும்போது தன்னைப் பெற்ற ஆத்தா கிண்ணி பிச்சை எடுக்கிறாளாம்; பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் பண்ணுதாம் என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. இந்த பழமொழி பெத்த ஆத்தா சாப்பாட்டுக் இல்லாமல் பிச்சை எடுத்துக்கிட்டு இருக்கா, அவ பெத்த புள்ள கும்பகோணத்துக்கு போய் பசுமாடு தானம் பண்ணிக்கிட்டு இருக்கான் என்பதாகும்.

உங்களை நம்பி வாக்களித்த சிவகாசி தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து, லட்சக்கணக்கான குடும்பங்கள் கண்ணீரும் கம்பலையுமாகத் தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், நீங்கள் சென்னை மாநகர அறைகளில் உட்கார்ந்து கொண்டு தொழில் முதலீடு கொண்டு வந்துவிட்டோம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது, 1.5 டிரில்லியன் அமெரிக்கன் டாலர் பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்கிறோம் என்று கூறுகிறீர்கள். இதைக் கேட்கும்போது அந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

#### ஸ்டிக்கர் ஒட்டும் அரசு!

தொடர்ந்து, இந்த ஆட்சியில் ஒவ்வொரு துறைக்கும் வழங்க வேண்டிய நிதியைக் குறைத்திருக்கிறீர்கள். பட்டாசுத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி, கல்வித்துறை நிதி என பல்வேறு துறைகளிலும் நிதி குறைக்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த நல்ல திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்து, அதற்கு த.வெ.க. அரசு ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள். எல்லாவற்றிலும் வெற்றி, வெற்றி என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்கிறீர்கள். ஆனால் அந்த வெற்றி உண்மையிலேயே மக்களின் வெற்றியாக இருக்கிறதா என்றால் இல்லை. அவை வெற்றித் திட்டங்களாக இல்லை; வெற்றுத் திட்டங்களாகத் தான் இருக்கின்றன.

த.வெ.க. அரசு இந்த மூன்று மாத காலத்தில் முற்றிலுமாகத் தோல்வியடைந்துள்ளது. அந்தத் தோல்வியின் வெளிப்பாடுதான் அவர்களின் நிதி நிலை அறிக்கை மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாத நிலைக்கு சென்றது.

விருதுநகர் மாவட்டத்தின் வாழ்வாதாரமும், ஜீவாதாரமும் ஆன பட்டாசுத் தொழிலை முழுமையாகக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. எனவே, சட்டப்படியும், மனசாட்சிப்படியும் நூறாண்டு காலமாக இயங்கி வரும் இத்தொழிலைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.